DINAKARAN 20-JUL-08

# ஈஷா யோகா வகுப்பு23ல் துவக்கம்

**கோவை, ஜூலை 20 :** கோவையில் ஈஷா யோக வகுப்புகள் ஆனந்த அலையாக வரும் 23ம் தேதி முதல் ஆகஸ்ட் 19ம் தேதி வரை நடக்கிறது.

இது குறித்து ஈஷா யோக வகுப்பு ஆனந்த அலை ஒருங்கிணைப்பாளர்கள் செல்வராஜ் மற்றும் பிரபோதா ஆகியோர் கூறியதாவது:

ஈஷா அறக்கட்டளை சார்பில் ஆனந்த அலை 7 நாள் ஈஷாயோகா வகுப்பு தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் நடந்து வருகிறது. இதன் ஒரு பகுதியாக கோவை நகரை சுற்றியுள்ள பல்வேறு இடங்களிலும் சுமார் 100க்கும் மேற்பட்ட வகுப்பு நடக்கிறது. முதல் கட்டமாக வரும் 23ம் தேதி ஆர்.எஸ்.புரம், பீளமேடு, துடியலூர், சுந்தராபுரம், வைசியாள் வீதி மற்றும் மேட்டுப்பாளையம், பொள்ளாச்சி, குன்னூர், சோமனூர் ஆகிய பகுதிகளில் ஈஷா யோக வகுப்புகள் நடக்கிறது. மேலும் பல கட்டங்களாக ஈஷா யோக வகுப்புகள் கோவை நகரை சுற்றியுள்ள பல பகுதிகள், தொழிற்சாலைகள், கல்லூரிகள், குடியிருப்புகள் போன்ற இடங்களில் நடக்கிறது. ஆனந்த அலை ஈஷா யோக வகுப்புகள் கோவையில் 40 இடங்களில் நடக்கிறது. மேலும் கோவையில் ஆனந்த அலை ஈஷா யோக வகுப்புகள் குறித்த 1.15 லட்ச சிடிகள் வினியோகம் செய்யப்பட உள்ளது.

ஆனந்த அலையாக நிகழும் ஈஷா யோக பயிற்சியில் பங்கேற்பவர்களுக்கு சத்குருவுடன் ஆனந்த சங்கமத்தில் கலந்து கொள்ளும் அரிய வாய்ப்புள்ளது. கோவையில் வரும் ஆகஸ்டு 23ம் தேதி சத்குருவுடன் ஆனந்த சங்கம நிகழ்ச்சி நடக்கிறது. இந்நிகழ்ச்சி சத்குருவின் அருளுரை, கேள்வி பதில்கள், கூட்டு தியானம் மற்றும் இசை நிகழ்ச்சிகளும் நடைபெறும்.

இது குறித்த விபரங்களுக்கு 98942 80717, 98940 23582 மற்றும் 0422- 2495453 ஆகிய எண்களில் தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு அவர்கள் கூறினர்.

DINAMANI 20-JUL-08

# 23–ல் ஈஷா யோகா பயிற்சி துவக்கம்

**கோவை, ஜூலை 19:** கோவையில் வரும் 23-ம் தேதி யோகா பயிற்சி வகுப்புகள் துவங்கப்படும் என்று ஈஷா யோகா மையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அம் மையத்தின் யோகா ஆசிரியர் ஸ்வாமி பிரபோதா நிருபர்களிடம் கூறியது:

ஈஷா யோகா மையம் துவங்கப்பட்டு 25 ஆண்டுகள் நிறைவு பெறுகிறது. இதைக் கொண்டாடும் விதத்தில் தமிழகம் முழுவதும் 7 நாள் ஈஷா யோகாப் பயிற்சி நடைபெற்று வருகிறது.

வரும் 23-ம் தேதி முதல் மேட்டுப்பாளையம், பொள்ளாச்சி, சோமனூர் உள்ளிட்ட 40 இடங்களில் ஈஷா யோகாப் பயிற்சி வகுப்புகள் நடைபெற உள்ளன.

தொழிற்சாலை, கல்லூரி, குடியிருப்புகளிலும் இவ் வகுப்புகள் நடத்தப்பட உள்ளன.

ஆகஸ்டு 23-ம் தேதி ஞானி சத்குரு பங்கேற்கும் 'ஆனந்த சங்கமம்' நிகழ்ச்சி கோவையில் நடைபெறும். யோகா பயிற்சியை முடிப்பவர்கள் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு ஞானி சத்குருவின் அருளுரையைக் கேட்டு பயன் பெறலாம்.

இதுகுறித்து மேலும் விவரங்களை அறிய 98942 80717, 98940 23582, 0422-2495453 ஆகிய எண்களைத் தொடர்பு கொள்ளலாம் என்றார்.

DINAMALAR 21 JUL 2008

# ஆகஸ்ட்டில் நடக்கிறது ஈஷாவின் ஆனந்த சங்கமம்

**கோவை, ஜூலை 21-**

ஈஷா யோகாவின் ஆனந்த அலை பயிற்சி வகுப்புகள் கோவையில் 40 இடங்களில் நடக்கிறது. ஆகஸ்ட் 19 வரை நடக்கும் இந்த பயிற்சி வகுப்பில் பங்கேற்றவர்கள் ஆக., 23 ல் கோவையில், ஈஷா யோக மைய நிறுவனர் ஜக்கி வாசுதேவ் பங்கேற்கும் ஆனந்த சங்கமம் நிகழ்ச்சியில் பங்கேற்கலாம்.

ஈஷா யோகா மையத்தின் 25 ஆம் ஆண்டு நிறைவை ஒட்டி, தமிழகம் முழுவதும் மே மாதத்தில் இருந்து 'ஆனந்த அலை' என்ற பெயரில் யோகா பயிற்சி வகுப்பு நடந்து வருகிறது. இந்த பயிற்சி வகுப்பு ஜூலை 16 துவங்கி ஆக., 19 வரை கோவையில் நடக்கிறது. இத்துடன் ஆக., 23 ல் கோவையில் ஈஷா யோகா நிறுவனர் ஜக்கி வாசுதேவ் பங்கேற்று ஆனந்த சங்கமம் நிகழ்ச்சி நடக்கிறது. இதில், ஜக்கி வாசுதேவின் அருளுரை, கேள்வி பதில், கூட்டு தியானம் மற்றும் இசை நிகழ்ச்சிகள் இடம்பெறும். ஆனந்த அலை பயிற்சி வகுப்பில் பங்கேற்போர் ஆனந்த சங்கமத்தில் கலந்து கொள்ளலாம்.

ஆர்.எஸ்.புரம், பீளமேடு, துடியலூர். சுந்தராபுரம், வைசியாள் வீதி, மேட்டுப்பாளையம், குன்னூர், கூடலூர், சோமனூர் ஆகிய பகுதிகளில் நடக்கும் இந்த ஆனந்த அலையில் பங்கேற்க விரும்புவோர் 98942 80717 / 98940 23582 / 0422 - 249 5453 என்ற எண்களில் தொடர்பு கொள்ளலாம்.